


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை சார்பாக நடைபெற்ற உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (13.07.2016) கொடியசைத்து, துவக்கி வைத்தார்கள். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 438/2016 நாள்: 13.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை சார்பாக, நடைபெற்ற உலக மக்கள் தொகை விழிப்புணர்வு பேரணியை இன்று (13.07.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை சார்பாக நடைபெற்ற உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை இன்று (13.07.2016) கொடியசைத்து துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டு தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் அனைவரையும் பாதுகாக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, பல்வேறு விதமான மருத்துவ திட்டங்களை அறிவித்து, சுகாதாரதுறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலதுறையின் மூலம் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் உலக மக்கள்தொகை தினமான ஜூலை 11-ம் தேதி மக்கள்தொகை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், “பொறுப்புகளை நிறைவேற்ற திட்ட இடுங்கள்” என்ற தலைப்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலதுறை சார்பாக, உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணி இன்று (13.07.2016) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துவங்கி, டதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளி, வேப்பமூடு ஜங்ஷன், அண்ணா பேரூந்துநிலையம், புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளி வழியாக சென்று, கோட்டார் ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நிறைவடைந்தது.

பேரணியில் நாகர்கோவில் இந்துக்கல்லூரி, கோட்டார் ஆயுர்வேதமருத்துவக்கல்லூரி மற்றும் கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 300-க்கும் மேற்பட்ட மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி பங்கேற்றனர் என தெரிவித்தார்.

இதற்கு முன்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அனைத்து அரசு அலுவலர்களும், கல்லூரி மற்றும் பள்ளி மாணவிகளும் உலக மக்கள்தொகை தின உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட கிராமிய இசை கலைஞர்கள் ஜெண்டை மேளங்கள் முளங்க, பூவார் குழுவினரின் சிலம்பாட்டம் நடைபெற்றது. மேலும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலதுறை மற்றும் கோல்டன் சிட்டி ரோட்டரி சங்கத்தின் மூலம் “உலக மக்கள்தொகை கட்டுப்பாடு உன்னத வாழ்வு தரும் மேம்பாடு”, “நிரந்தர கருத்தடை செய்திடுவீர், நிம்மதியான வாழ்க்கைக்கு வித்திடுவீர்”, “கருத்தடை ஏற்றிட்ட குடும்பம் - தினம் எல்லையில்லா இன்பத்தில்

மகிழும்”, நிரந்தர கருத்தடையை ஏற்போம், நம் குடும்ப சுமை நீக்கி மகிழ்வோம்”, கருத்தடைக்கு ஆண் பெண் பேதமில்லை இல்லற மகிழ்விற்கு என்றும் குறைவுமில்லை”, “அளவான குடும்பத்திற்கு கருத்தடை நம் மகிழ்வான வாழ்விற்கு அடிப்படை”, “பொறுப்புகளை நிறைவேற்ற திட்டமிடுங்கள், பொன்னான வாய்ப்பிது உணர்ந்து கொள்ளுங்கள்” என்ற ஏழு தலைப்பில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை (ஸ்டிக்கர்) வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார், இணை இயக்குநர் (பொ) (மருத்துவ பணிகள்) மரு. கே. ராஜையன், துணை இயக்குநர் (பொ) (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலதுறை) மரு. எல்.பி. சாஸ்தா, கோட்டார் ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. கிளாரன்ஸ் டேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பேராசிரியர் திரு. பகவதிபெருமாள், திரு. பழனியாபிள்ளை, திரு. ஜெகன், திரு. விமலநாதன், திரு. முகம்மத் சலாவூதின், கிராமிய கலைஞர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.